ORIGINAL ARTICLE

# தமிழ் இலக்கணச் சிறப்புகள்
# [TAMIḺ ILAKKAṆAC CIṞAPPUKAḶ]

# SPECIALTY IN TAMIL GRAMMAR

**ச. திருநாவுக்கரசு / S. Thirunavukkarasu *[1]**

[1] Srimath Sivagnana Balaya Swamigal Tamil Arts and Science College Mailam, Tamilnadu, India. Email: nsthirunavukkarasu1973@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/155

**Abstract**

This article explains the Specialty of the Tamil language. The Tamil language and literature has a long tradition. In that tradition Tholkapiyam is one of the masterpieces of the literary grammar of the Tamil language. It remains the treasury of knowledge of the Tamil people to this day. The complete grammar of all the texts available to us is the epic. This article trying to prove that grammar is archaic and profoundly semantic is to say that it only refers to archeology in a special sense in Tholkapiyam. Explanatory methodology was adopted for this study. 'Tholkapiyam porulathikaram' is of benefit to literary historians and critics alike, as it is not only a grammar text for 'ezhuthu' and 'Sol', but also a grammar book for literature related to Tamil life. This article explains that semantics with such multifaceted features is unique to Tamil.

**Key words:** Grammar, Tholkapiyam, Tinai, Interior in Love, External Life, Premarital Love, Marital Love

**ஆய்வுச் சாரம்**

தமிழ் மொழி நீண்ட நெடிய பாரம்பரியத்தைக் கொண்டு விளங்குகின்றது. இலக்கிய இலக்கண வளம் நிறைந்த தமிழ்மொழியின் தலைசிறந்த இலக்கணமாகத் தொல்காப்பியம் திகழ்கின்றது. தமிழ் மக்களது பேரறிவின் கருவூலமாக இன்று வரை நின்று நிலவுகிறது. நமக்குக் கிடைத்துள்ள எல்லா நூல்களுக்கும் முற்பட்ட முழுமையான இலக்கண நூல் தொல்காப்பியமே ஆகும். இக்கட்டுரையின் மைய நோக்கமாக, தொன்மையினாலும், ஆழ்ந்த பொருளுடைமையாலும் இலக்கணம் என்று சொன்னாலே, அது தொல்காப்பியத்தை மட்டுமே சிறப்பு நிலையில் குறிக்கிறது என்பதை விளக்கி செல்கிறது. இவ்வாய்வு நூலாய்வு முறையில் மேற்கொள்ளப்பட்டு, விளக்கமுறை அணுகுமுறையை பின்பற்றியுள்ளது. எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் உரைப்பதோடு மட்டும் அல்லாமல், தமிழர் வாழ்க்கையை ஒட்டி அமைந்த இலக்கியத்திற்கும் இலக்கணம் கூறும் நூலாக இருப்பதால் தொல்காப்பியப் பொருளதிகாரம், இலக்கிய வரலாற்று அறிஞர்க்கும், திறனாய்வாளர்க்கும் ஒருங்கே

பயனளிப்பதாக உள்ளது. இத்தகைய பன்முகச் சிறப்புகள் கொண்ட பொருளிலக்கணம் தமிழுக்கே உரிய தனிப்பெருமை என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

**கருச்சொற்கள்:** இலக்கணம், தொல்காப்பியம், திணை, அகம், புறம், களவு நெறி, கற்பு நெறி.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 18th June 2021, revised 26th July 2021, accepted 30th July 2021

### முன்னுரை

தொல்காப்பியர் உலக வழக்கு, செய்யுள் வழக்கு எனும் இரண்டையும் ஆராய்ந்து எழுத்து, சொல், பொருள் எனும் இலக்கணத்தைக் கூறினார். நூல் மரபு, மொழி மரபு, சொற்றொடர் மரபுகள், செய்யுள் மரபுகள், போன்ற யாவற்றையும் தொகுத்து முறைப்பட வகுத்து நிரல்பட வகுத்த செய்தியைப் பனம்பாரனார் குறிப்பிடுகின்றார்,

வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி
புலம் தொகுத்தோனே போக்கறு பனுவல்

இப்பாயிர அடிகளால் இலக்கணத்தின் உண்மை வடிவம் இன்னதென்பது தெளிவாகின்றது. தொல்காப்பியர் ஏற்கனவே மக்களிடையே வழங்கி வந்த தமிழ் இலக்கியத்தின் தன்மைகளை ஒரு சேரத் தொகுத்து முறைப்பட வகுத்துள்ளார் (Devaneyapavanar, 1972)[1].

### பொருளதிகாரம்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் 656 நூற்பாக்கள் உள்ளன. இவற்றுள் மனித வாழ்க்கைக்கு நன்மை பயப்பனவும், உயிர்க்கு உறுதி பயப்பனவும் கூறப்பெற்றுள்ளன. பரந்து கிடக்கும் இப்பொருளை அகம், புறம் என இரண்டாகப் பிரிப்பர். உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் முதல், கரு, உரிப்பொருள் எனும் மூன்றுள் அடக்கிக் கூறுவர்,

முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலும் காலை முறைசிறந் தனவே
பாடலுள் பயின்றவை நாடுங்காலை (Ganesaiyar, 2007)[2]

தொல்காப்பியப் பொருளதிகாரம் வெறும் இலக்கியங்களுக்குக் கூறும் இலக்கணம் மட்டுமன்று அது தமிழர்களுடைய வாழ்க்கை முறைக்கும் இலக்கணம் கூறும் ஓர் ஒப்பற்ற சமுதாய நூல் என்றே கூறலாம். இப்பிரிவினை எண்ணிப் பார்த்தால் தொல்காப்பியருடைய பரந்த பார்வையும் ஆழ்ந்த கருத்தும் எளிதில் புலனாகும்.

**பொருளதிகாரப் பிரிவுகள்**

உயிர்கள் யாவும் இன்பத்தை நாடுவது இயல்பு. உணர்ச்சிகளுள் சிறந்தது இன்ப வளர்ச்சி. அவ்வின்பம் காரணமாகத் தலைவன் தலைவியருக்குள் ஒத்த அன்பின் வாழ்க்கையைக் குறிஞ்சி முதலாக உள்ள ஐந்து திணைகளுள்ளும் ஒவ்வாத அன்பினைக் கைக்கிளை பெருந்திணைகளுள்ளும் அமைத்துக் காட்டுவர். அகப்பொருள் போலவே புறம் எனும் பகுதியில் அறச்செயல்களையும், மறச்செயல்களையும் அடக்கிக் கூறுவர். வெட்சி முதல் பாடாண் வரை ஏழு திணைகளில் புறப்பொருளை விரித்துப் பேசுவர். அகத்தில் சிறப்புப் பொருளாக விளங்கும் களவியல், கற்பியல் அடுத்தடுத்துப் பேசுகின்றன. இந்நான்கு இயல்களில் கூறாது விடுபட்டனவற்றைப் பொருளியல் மொழிகின்றது. தலைமக்களின் வாழ்வியலை விரித்துக் கூறுவதாக இவ்வியல் அமைகிறது. பொதுவாக மக்களிடையே தோன்றும் உணர்ச்சிகளைக் குறித்து மெய்ப்பாட்டியல் விளக்குகிறது. அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்வுகளைக் கவிஞர்கள் உவமையாகச் செய்யுள்களில் கலைத் திறனுடன் எடுத்தாள்வதை உவமையியல் உரைக்கின்றது. வாழ்க்கையைக் கலைத்திறமையுடன் வெளிப்படுத்த ஏற்புடையதாக இருப்பது கவிதை. உரைநடையில் கூறுவதைவிடச் செய்யுளில் கூறும்போது வாழ்வு மிளிர்கின்றது. இத்தகைய கவிதைக்கு உயிரூட்டும் செய்யுள் உறுப்புகளைப் பற்றிக் கூறுகிறது செய்யுளியல். மரபாக வழங்கி வரும் சொற்கள் குறித்த பதிவுகள் மரபியலில் பேசப்படுகின்றன. தொல்காப்பியப் பொருளதிகாரம் வாழ்க்கையைக் கூறும் கருத்துலகமாக விளங்குகின்றது.

**முப்பொருள்**

முதல், கரு, உரி என உலகப்பொருள்களை மூன்றாகப் பகுத்தார் தொல்காப்பியர். இவற்றுள் ஒரு செயல் செவ்வனே நடைபெறுவதற்கு இன்றியமையாத நிலமும் காலமும் முதல்பொருள் எனப்படுகின்றது.

> முதலெனப்படுவது நிலம் பொழுதிரண்டின்
> இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே (Ganesaiyar, 2007)[2]

எனும் இவ்வுண்மையினை வள்ளுவர்,

> ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
> கருதி இடத்தாற் செயின்.

எனும் குறள் வழி விளக்குகின்றார் (Kunrakudi Adikalar, 2005)[3].

மக்களின் பிறப்பு, இறப்பு, பிறசெயல்களையும் வரையறை செய்ய கருவியாக இருப்பது காலமும், அவை நிகழ்வதற்கான இடமும் என்பதை உணர்ந்தே இக்கருத்து முதன்மையாகிறது. காலம் என்பது கற்பனைக்கு எட்டாத ஒரு பொருள் காலத்தை நேரடியாக அளக்க முடியாது. அது அருவப் பொருள்,

> நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
> வாள துணர்வார்ப் பெறின் (Kunrakudi Adikalar, 2005)[3]

என்று நாளின் தன்மையினைக் கூறி நிலையாமை தத்துவத்தினை எடுத்துரைத்தார் வள்ளுவர். இடத்தலும், காலத்திலும் தோன்றும் பொருள் கருப்பொருள். இவை வெவ்வேறு இடங்களிலும் காலங்களிலும் வெவ்வேறு விதமாக அமையும். மலை, காடு, கடல், வயல் எனக் காணும் பொருள்கள் பல மாறுதல்களைக் கொண்டவை. தெய்வம், உணாவே, மா, மரம், புள், பறை, செய்தி, யாழ், தொழில் என்பன நிலத்திற்கேற்றவாறு மாறுபட்டு அமைவது இயற்கை.

உரிப்பொருள் வரிசையில் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பன மக்கட்கு உரியன. மக்களின் வாழ்க்கை ஒழுக்கமே உரிப்பொருள் எனப்பட்டது.

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேரும் காலை திணைக்குரிப் பொருளே (Ganesaiyar, 2007)[2].

குறிஞ்சி நிலத்தில் புணர்ச்சி நிகழ்வதாகச் சொல்வது இலக்கிய மரபு. இவ்வாறே ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய ஒழுக்கங்களை இணைத்துக் கவிதை இயற்றுவர். உலக வழக்கில் மலைநாட்டில் மட்டும் காதலர்கள் ஒன்றுபடுவர் எனும் வரையறையைத் தாண்டி வேறிடங்களில் தலைமக்கள் சந்தித்து ஒன்றுபடுவதும் உண்டு. இது உலக வழக்கு.

இலக்கியத்தின் சுவையை மிகுதிப்படுத்த இலக்கிய ஆசிரியர்கள் தம் கற்பனையால் பல உத்திகளைக் கையாளுவது வழக்கம். அந்த முறையில் புணர்தல் என்ற நிகழ்ச்சிக்கு இயற்கை வளமும் தனிமையும் மிக்க மலைநிலம் ஏற்றது. தனிமை குளிர் காலத்தில் நடுயாமத்தில் இயல்பாக அமைவது. எனவே குறிஞ்சி நிலத்தில் குளிர்காலத்தில் நள்ளிரவில் குறிஞ்சிக் கருப்பொருள்களின் சூழ்நிலையில் குறிஞ்சி உரிப்பொருள்களாகிய புணர்ச்சி நடைபெறுவதாகச் சொன்னால் கட்டாயம் நாம் அதன் தனிச்சுவையை உணரலாம். இவ்வாறு முதல், கரு, உரிப்பொருள் ஆகிய மூன்றும் இணைந்து திறனுடன் ஆக்கப்பெற்ற பாடல்களை நாடக வழக்கு என்பர் தொல்காப்பியர்.

**அகப்பொருளில் குறிப்புப் பொருள்**

அகப்பாடல்களில் இடம்பெறும் முக்கியக் கூறுகளுள் உள்ளுறையும் இறைச்சியும் முதலிடம் பெறுகின்றன. தெய்வம், தவிர்த்த பிற கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு உள்ளுறை பிறக்குமென்பர்,

உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலமெனக்
கொள்ளும் என்ப குறிஅறிந்தோரே (Ganesaiyar, 2007)[2]
உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகவென
உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம் (Ganesaiyar, 2007)[2]

இவ்வுள்ளுறைப் பொருள் ஐந்து நிலைகளில் அமையும் எனப் பொருளியல் சுட்டுகின்றது. (உவமம், சுட்டு, நகை, சிறப்பு). தொனிப்பொருள் என வடமொழியில் சுட்டப்பெறும் குறிப்புப்பொருள் இறைச்சி எனப்படுகின்றது. ஒவ்வொரு நிலத்திலும் கருக்கொள்ளும் கருப்பொருள்களே இறைச்சிப்பொருளுக்கும் முதன்மையாக அமைகிறது.

இறைச்சி தானே உரிப்புறத்ததுவே (Ganesaiyar, 2007)[2].
இறைச்சியிற் பிறக்கும் பொருளுமுாறுளவே
திறத்தியல் மருங்கின் தெரியுமோர்க்கே (Ganesaiyar, 2007)[2].

எனும் நூற்பாக்கள் குறிப்பைப் புலப்படுத்தும் இறைச்சிப் பொருளின் இலக்கணத்தை மொழிகின்றன. இறைச்சிப் பொருளென்பது உரிப்பொருளின் புறத்தே தோன்றும் பொருள் என்றவாறு என்று உரையெழுதி அஃதாவது கருப்பொருளாய் நாட்டிற்கும் ஊர்க்கும் துறைக்கும் அடையாகி வருவது என விளக்கமும் இளம்பூரணரால் தரப்பெற்றுள்ளது. (Sivalinganar, 1994)[4].

**திணை**

திணை என்பதற்கு நிலம், இடம், வீடு, குலம், ஒழுக்கம், எனப் பலபொருள்கள் உண்டு என்பதைச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரகராதி சுட்டுகின்றது (Vaiyapurippillai, 1920)[5]. அகத்திணைகள் கைக்கிளை முதலாகப் பெருந்திணை வரை ஏழு வகைப்படும். கைக்கிளை என்பது ஒரு பக்கத்தில் கிளைப்பதாகிய அன்பு எனப்படும். ஆண் மட்டும் விரும்பும் நிலையினை குறிக்கிறது. (Thamburaj & Ponniah, 2016)[6]. இத்தினை பொருத்தமற்ற உறவுகளைப் பொருந்தாக் காமம் எனக் கூறி பெருந்திணை என்றனர். இவ்விரு நிலைகளுமின்றி ஒத்த அன்புடைக் காமமே அன்பின் ஐந்திணை எனப்பட்டது. (Balasubramaniyan, 2008)[7]. தாமரையின் புறை இதழ் போலவும் அகப்பொருளில் கைக்கிளையும், பெருந்திணையும் சேர்க்கப்பட்டன.

**அகமாந்தர்கள்**

ஐந்திணை ஒழுக்கத்தில் ஒழுகுபவர்கள் தலைமக்களாவர். இவர்களது வாழ்வு செம்மையாக நடைபெறுவற்கு உறுதுணையாக இருப்போர் பலர் (Namasivaya Muthaliyar, 1943)[8]. தோழி, நற்றாய், செவிலி, பாங்கன், பாணன், விறலியர், அறிவர், கண்டோர், கூத்தர், இளையர், விருந்தினர், தேர்ப்பாகன், ஆகியோர் தலைமக்களின் குறிக்கோள் வாழ்விற்குத் துணைபுரிகின்றனர். **(**Saminatha Aiyer, 1986)[9].

**களவுநெறி**

காதலர்க்கு அடித்தளம் காதல் கொள்வார் மாட்டு உண்டான மன இணக்கம். உள்ளப் புணர்ச்சி, பிறப்பு, குடிமை, எனப் பேசப்பெற்ற பிற தகுதிகள் எல்லாவற்றிலும் சிறந்தது.

அகத்துறையில் காதல் இன்பத்தைத் துய்ப்பதில் துன்பத்தில் களவு, கற்பு என்ற இருவேறு நிலைகள் உள்ளன. "பிணி மூப்புகளின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய் உருவும் திருவும் பருவமும் குலமும் குணமும் அன்பும் முதலியவற்றால் ஒப்புமையுடையராய் தலைமகனும் தலைமகளும் பிறர்கொடுப்பவும் அடுப்பவுமின்றி ஊழ்வகையால் தாமே எதிர்பட்டுக் கூடுவது.

தலைமக்கள் இருவரும் கரந்த உள்ளத்தோடு எதிர்ப்பட்டுப் புணர்தலின் களவு எனப்பெயர்பெற்றது. இக்களவு நெறி அன்போடு புணர்ந்ததாதலின் காமக்கூட்டம் என்றும் வழங்கப்பெறும். இதனை மறைந்த ஒழக்கம், மறை அருமறை என்ற சொற்களால் களவினைத் தொல்காப்பியர் குறிப்பிடுவர்.

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக்கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே (Ganesaiyar, 2007)[2]

சிந்தாமணி ஆசிரியரும், களவுநெறி தமிழ் வழக்கே என்பதை,

இலைபுறம் கண்ட கண்ணி
யீன்றமிழ் இயற்கை இன்பம்

தேவர் பண்ணிய தீந்தொடை இன்சுவை
மேவர் தென்றமிழ் மெய்ப்பொருள் ஆதலின் (Ganesaiyar, 2007)[2].

என்ற பாடலடிகளால் உணர்த்துகின்றார்.

காமக்கூட்டத்தில் உள்ளப்புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி எனும் இருநிலைகள் உண்டு. அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே என்பது உள்ளப் புணர்ச்சியைக் குறிக்கிறது. உலகியலில் நேரிடும் பலவகை இடர்ப்பாடுகளால், ஒருவரை யொருவர் மணந்து கொள்ள இயலாமல், உள்ளப்புணர்ச்சியாகவே கூடிவாழ்ந்து, பின்னர் இறந்த காதலரும் இருந்தனர் என்பதற்குத் தருமத்தன் – விசாகை என்போரின் வரலாறே சான்றாகும் (Saminatha Aiyer, 1986)[10].

## கற்புநெறி

கற்பு என்பது திருமணத்தைக் குறிக்கும் . பெற்றோர் பெண்ணைக் கொடுக்க தலைவன் பெண்ணைப் பெற்றுக் கொள்வது கற்பாகும். (Thamburaj, 2021)[11].

கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குறி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே
(Ganesaiyar, 2007)[2]

பெற்றோர் இன்றியும் திருமணம் நிகழ்வதுண்டு. மனமொத்த தலைமக்கள் உடன்போக்கு மேற்கொள்வதும் கற்பு என்பதை,

கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான (Ganesaiyar, 2007)[2]

எனும் நூற்பா தெளிவுபடுத்துகின்றது.

தொல்காப்பியர் காலத்திலேயே பொய்யும் வழுவும் தோன்றியது. இதனால் ஆணும் பெண்ணும் இணைந்த வாழ்க்கை நடத்துவற்குக் கரணம் எனும் கற்பு நெறி தேவை என்பதை உணர்த்த பெற்றோர் திருமணத்தை உருவாக்கினர்,

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப (Ganesaiyar, 2007)[2]

தலைமக்களின் கற்புக்கால வாழ்வில், பரத்தையர் தொடர்பு பெரும்பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஊடல் தீர்க்கும் வாயில்கள் தலைமக்களை ஒன்றுபடுத்துவதில் பெரும்பங்கு வகிக்கின்றனர். (CHARLES OWEN, 1993)[12]. கற்புக் கால வாயில்களாகப் பன்னிருவர் குறிப்பிடப்படுகின்றனர். தலைவன், தலைவி, தோழி, பரத்தை, காமக்கிழத்தியர் கூற்றுகள் கற்பியலில் முக்கியத்துவம் பெறுகின்றன (Vasantakumaran, 2020)[13].

## முடிவுரை

தொல்காப்பியப் பொருளதிகாரம் விரிந்த பரப்புடையது. இதனை அகம், புறம் என இரண்டெனப் பிரித்தனர் (Ponniah, 2021)[14]. இவற்றுள் அகப்பொருள் சார்ந்த இலக்கணக் கூறுகள் பொருளதிகாரத்தில் சிறப்பாகவும் விரித்தும் பேசப்படுகின்றன (Cristina Sanz, 2016)[15]. அகப்பொருளின் பொது மரபுகள், களவு நெறி, கற்பு நெறி எனும் அகம் சார்ந்த சிறப்புக்கூறுகள், ஏழு திணை, முதல், கரு, உரிப்பொருள்களின் முதன்மை, அகமாந்தரின்

முக்கியத்துவம், அகப்பொருளில் குறிப்புப்பொருள் போன்றவை இக்கட்டுரையில் விளக்கம் பெறுகின்றன.

**References:**


1. Devaneyapavanar, G. (1972). *Tholkapiyam ezhuththathikaram [Tholkapiyam Orthography]*. Chennai: Tenkizhakku Saiva Sidhthantha Noorpathippu Kazhagam.
2. Ganesaiyar. (2007). *Tholkapiyam Porulathikaram [Tholkapiyam Subject]*. Chennai: Ulaga Tamizh aaraichi niruvanam.
3. Kunrakudi Adikalar. (2005). *Thirukural [Thirukural]*. Thiruvannamalai: Thiruvannamalai Aadeenam publication.
4. Sivalinganar. (1994), *Tholkapiyam Porulathikaram poruliyal uraivalam [Subject Matter of Tholkapiyam and Commentatory]*. Chennai: The International Institute of Tamil Studies (IITS).
5. Vaiyapurippillai, S. (1920), *Tamizh Perakarathi [Tamil Dictionary]*. Chennai: Madras University Publication.
6. Thamburaj, K. P., & Ponniah, K. (2016). Hierarchical grammatical tagging for tinai (landscape) of cankam Tamil literature. *Indian Journal of Science and Technology*, *9*(48).
7. Balasubramaniyan, K.V. (2008). *Canga ilakkiya kolkaigal [Principles in Sanga Illakiyam]* Madurai: Meenatchi Puththaga Nilayam.
8. Namasivaya Muthaliyar, K. (1943). *Irayanar kalaviyal ennum Irayanar Agapporul [Iṟaiyaṉār kaḷaviyal eṉṉum iṟaiyaṉār akapporuḷ]*. Chennai: C.N.R. & Sons.
9. Saminatha Aiyer, Uv.Ve. (1986). *Cheevaga Sinthamani [Cīvaka cintāmaṇi]*. Chennai: Uv.Ve.Sa. Book Publishers.
10. Saminatha Aiyer, Uv.Ve. (1921), *Maṇimegalai [Maṇimēkalai]*. Chennai: Uv.Ve.Sa. Book Publishers.
11. Thamburaj, K. P. (2021). A Process of Developing an ASR System for Malay and Tamil Languages. *Design Engineering*, 731-741.
12. CHARLES OWEN, (1993). Corpus-Based Grammar and the Heineken Effect: Lexico-grammatical Description for Language Learners[1], *Applied Linguistics*, Volume 14, Issue 2, Pages 167–187, https://doi.org/10.1093/applin/14.2.167.
13. S. Vasantakumaran. (2020). Improve learning of peyareccam by using film technique [திரைப்பட உத்தியைப் பயன்படுத்தி மாணவர்களின் பெயரெச்சம் கற்றலை மேம்படுத்துதல்.[ *Muallim Journal of Social Sciences and Humanities*, *4*(1), 73-78. https://doi.org/10.33306/mjssh/57.
14. Ponniah, K., Sivanadhan, I., Kumar, M., Nadarajan, P., & Akhmetova, A. (2021). The Use of ICT in Thirukkural Teaching and Facilitation. *Journal of Hunan University Natural Sciences*, *48*(6).
15. Cristina Sanz, Hui-Ju Lin, Beatriz Lado, Catherine A. Stafford, Harriet W. Bowden, One Size Fits All? Learning Conditions and Working Memory Capacity in *Ab Initio* Language Development, (2016), *Applied Linguistics*, Volume 37, Issue 5, Pages 669–692, https://doi.org/10.1093/applin/amu058.